பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 03 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பஞ்சாப் மாநிலம் முக்கிய பங்கு வகித்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
2. பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மொரீஷியஸ் தேசிய தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.
3. பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தை 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக வேளாண்துறை இணை அமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.
4. ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா குறித்து பொதுமக்களின் கருத்துக்களையும் பெற இருப்பதாக நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவர் தலைவர் திரு பி பி சௌத்ரி கூறியுள்ளார்.
5. கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்டம் இன்றுடன் நிறைவடைகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பஞ்சாப் மாநிலம் முக்கிய பங்கு வகித்திருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் மொகாலியில் அம்மாநில அரசு சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், பஞ்சாப் மக்கள் சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருவதாகக் கூறினார்.

உலகம் முழுவதிலும் உள்ள சீக்கிய குருத்வாராக்களில் லாங்கர் உணவு எவ்வித பாடுபாடுமின்றி அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் சமூக சீர்திருத்தம், கல்வி, அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு, தொழில்துறை, அரசியல் மற்றும் சமூக சேவைகளில் பஞ்சாப் மக்களின் பங்களிப்பு அளப்பறியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உணவு பற்றாக்குறை ஏற்பட்ட காலத்தில் பஞ்சாப் விவசாயிகள் கடுமையாக உழைத்து பசுமைப் புரட்சியை வெற்றிகரமாக்கியதுடன், நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவு பாதுகாப்பை வழங்கியதாகவும் திரு திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மொரீஷியஸ் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டின் தேசிய தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தம்மை இந்த விழாவிற்கு அழைத்ததற்காக மொரீஷியஸ் பிரதமர் திரு நவின் சந்திர ராம்கூலத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

முன்னதாக **port louis** நகரில் இந்திய வம்சாவளியினர் நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அந்நாட்டு பிரதமர் திரு ராம்கூலம் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு மொரீஷியஸ் நாட்டின் மிக உயரிய விருதான **Grand commander of the order of the star and key of the Indian Ocean** விருது வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு நரேந்திரமோடி, மொரீஷியஸ் அரசு மற்றும் மக்கள் சார்பில் தமக்கு அளித்துள்ள இந்த விருதை மிகுந்த மரியாதையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.

இது தமக்கு அளிக்கப்பட்ட தனிப்பட்ட கௌரவம் அல்ல என்றும், இந்தியா – மொரீஷியஸ் இடையேயான வரலாற்று ரீதியான பிணைப்புக்குக் கிடைத்த கௌரவம் என்றும் தெரிவித்தார்.

மொரீஷியஸ் பிரதமர் திரு நவின் சந்திர ராம்கூலம் மற்றும் அவரது மனைவி திருமதி வீனா ராம்கூலம் ஆகியோருக்கு வெளிநாடுவாழ் இந்தியர் அட்டைகள் வழங்கப்படும் என்றும் திரு நரேந்திரமோடி அறிவித்தார்.

மொரீஷியஸ் நாடு மினி இந்தியா போல திகழ்வதாக கூறிய அவர், 'பீகாரின் மக்கானா' விரைவில் உலகளாவிய தின் பண்டமாக உருவெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் சாகர் கொள்கையில் மொரீஷியஸ் முக்கிய இடம்பெற்றிருப்பதையும் திரு நரேந்திரமோடி சுட்டிக்காட்டினார்.

முன்னதாக மொரீஷயஸ் அதிபர் திரு தரம்பீர் கோகுலையும், திரு நரேந்திரமோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தை 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக வேளாண்துறை இணை அமைச்சர் திரு ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்த அவர், இத்திட்டத்திற்காக கடந்த 2021-22-ஆம் ஆண்டு முதல் 2025-26 வரையிலான காலத்திற்கு 69 ஆயிரத்து 515 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.

விருப்பம் உள்ள மாநிலங்கள் மற்றும் விவசாயிகள் இதில் சேர்ந்து பயன்பெறலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளதாகவும் திரு ராம்நாத் தாச்கூர் தெரிவீத்தார்

**[]<<<>>>[]**

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா குறித்து ஆய்வு செய்து வரும் நாடாளுமன்ற கூட்டுக்குழு பொதுமக்களின் கருத்துக்களையும் பெற இருப்பதாக அக்குழுவின் தலைவர் திரு பி பி சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில் பேசிய அவர், இது தொடர்பாக பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் க்யூஆர் கோடுடன் கூடிய விளம்பரம் வெளியிடப்படும் என்றும், அதன் வாயிலாக பொதுமக்கள் நேரடியாக தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம் என்றும் கூறினார்.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு கூட்டுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலிக்கப்படும் என்று திரு சௌத்ரி தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு ரஞ்ஜன் கோகோய், தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு ராஜேந்திரமேனன் ஆகியோர் பங்கேற்ற தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

[]<<<>>>[]

குழந்தைகள் இல்லாத பெண்கள் மறுமணம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கப்படும் என மத்திய பணியாளர் மற்றும் ஓய்வூதியத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தன்னார்வ அமைப்புகளின் கூட்டத்தில் பேசிய அவர், இந்த பெண்களுக்கு பிற வகைகளில் கிடைக்கும் வருமானம் ஓய்வூதியத்தைவிட குறைவாக இருந்தால் ஓய்வூதியம் பெறலாம் என கூறினார்.

பெண்கள் தொடர்பான பணி விதிகளில் மத்திய அரசு பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், விவாகரத்து பெற்ற அல்லது கணவரிடமிருந்து பிரிந்து வாழும் பெண்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

மும்மொழிக் கொள்கை விவகாரத்தில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், தமிழகத்தில் தமிழ் மொழி பயில்வோர் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் மொழியை பயில்வோர் எண்ணிக்கை குறைந்துள்ள நிலையில், அரசு பள்ளிகளில் உள்ள ஆங்கில வழிப்பாடப்பிரிவில் மாணவர் சேர்க்கை கடந்த ஐந்து ஆண்டுகளில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்வியை ஊக்குவிப்பது முக்கிய அம்சமாக இடம்பெற்றுள்ள நிலையில், தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க திமுக அரசு எதுவும் செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திமுக அரசு தனது தோல்விகளை மறைப்பதற்காகவே தேசிய கல்விக கொள்கை மற்றும் ஹிந்தி திணிப்பு பிரச்சினையை எழுப்பி வருவதாகவும் திரு தர்மேந்திரபிரதான் குற்றம்சாட்டியுள்ளார்.

[]<<<>>>[]

புதிய 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுக்களை வெளியிட இருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

மகாத்மாகாந்தி உருவப்படத்துடன் கூடிய இந்த நோட்டுக்கள் தற்போதுள்ள ரூபாய் நோட்டுக்களைப் போலவே இருக்கும் எனவும் அந்த வங்கி கூறியுள்ளது.

தற்போது புழக்கத்தில் உள்ள 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுக்கள் தொடர்ந்து செல்லுபடியாகும் எனவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

பஞ்சாபின் தரண் தரண் பகுதியில் ட்ரோன் மூலம் ஆயுதங்கள் போடப்பட்ட வழக்கில் ஒன்பது பேருக்கு சிறை தண்டனை விதித்து மொகாலியில் உள்ள என் ஐ ஏ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

கடந்த 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த சம்பவத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஆறு பேருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதமும், எஞ்சிய மூன்று பேருக்கு பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.,

இவர்கள் அனைவரும் காளிஸ்தான் ஆதரவு அமைப்புகளுடன் தொடர்பு உடையவர்கள் ஆவர்.

[]<<<>>>[]

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள மாக் பகுதியில் சென்று கொண்டிருந்த பெஷாவர் - குவெட்டா எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்த 450-க்கும் மேற்பட்ட பயணிகளை பிணை கைதிகளாக பிடித்து வைத்த கிளர்ச்சியாளர்கள் பின்னர் ராணுவ தலையீட்டின் பேரில் அவர்களை விடுவித்தனர்.

அப்போது நடைபெற்ற சண்டையில் ராணுவ வீரர்கள் ஆறு பேர் உயிரிழந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலுசிஸ்தான் போராளிக் குழுவை பாகிஸ்தானும், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ள நிலையில், இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

[]<<<>>>[]

கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் கட்டம் இன்றுடன் நிறைவடைகிறது.

ஜம்மு-கஷ்மீரின் குல்மார்க்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நிறைவு விழாவில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பங்கேற்று வீரர்களை கௌரவிக்கிறார்.

[]<<<>>>[]

உலக பாரா கிராண்ட் பிரிக்ஸ் தடகளப் போட்டியின் ஆடவர் வட்டு எறிதல் பிரிவில் இந்தியாவின் சாகர் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் பாலாஜி ராஜேந்திரன் வெள்ளிப்பதக்கத்தையும், ஜனக் சிங் ஹர்சானா வெண்கலப்பதக்கதையும் வென்றனர்.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் பெங்களூரு அணி 11 ரன் வித்தியாகத்தில் மும்பை அணியை வென்றது.

நாளை நடைபெறும் ப்ளே ஆப் சுற்று ஆட்டத்தில் மும்பை அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – கேரளா அணியை எதிர்கொள்கிறது.

***End of News***